(ஆ) அரசினர் உறுதிமொழிக் குழுவின் அறிக்கை.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசினர் உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது (ஆறாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

7. அரசினர் தீர்மானம்

விதி 21 உள்விதி 3-ன் கீழ்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு **பேரவைத்** தலைவர் அவர்களே, விதி 21, உள்விதி 3 இன் கீழ் **கீழ்க்கண்ட** தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"இனம் 4. அரசினர் சட்ட முன்வடிவு என்று இருப்பதை நீக்கி, இனம் 5, 1979–80ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும், என்று இருப்பதை எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

2. ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி.

உறுப்பினர் திரு. கிட்டப்பா வீட்டில் கோவில் சிலை இருந்ததாக அவர் கைது செய்யப் பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலிலே ஒழுங்குப் பிரச்சனையை திரு. சாதிக் பாட்சா எழுப்பியபொழுது "**.. அவருடைய **வீட்டின்**கொல்லைப் புறத்தில் சிலை இருந்ததாக* * * * *

அவர் கைது செய்யப்படுகிறார் என்றால் அவருக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய் விடுகிறது" என்று குறிப்பிட்டார். நாமே முன்னிட்டு சொல்ல வேண்டாமென்றும் அது வழக்குக்குப் பாதகமாக இருக்கும் என்பதாலேயும் அந்த வரிகளை நீக்க வேண்டுமென்று **உத்தரவிடுகிறேன்.** பின்னாலே எதிர்க் கட்சித் **தலைவர்**

*மாண்புமிகு **பேரவைத்** தலைவரின் **ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.**